14th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. ஏதாவது அவ்வாறு அதிகாரிகள் வோட்டு அளித்து, மற்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்திருந்தால், கனம் அங்கத்தினர் தெரிவிக்கலாம். அப்படிப் பிரச்னை ஏற்பட்டால், அது ஆராயப்பட்டு என்ன நிலைமை என்பதை விளக்கலாம்.

திரு. கே. பொன்னையா : ஒரு சில மாநிலங்களில் வளர்ச்சி மன்றங்களின் தலைவர்களாக நான்-அபிஷியல்களைப் போட்டிருக்கிறார்கள். நமது மாநிலத்தில் கலெக்டர் இருக்கிறாரே, அதற்கு என்ன காரணம் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்ட மன்றம் அதை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து, இந்த மாநிலத்திலே அந்த மன்றங்களுக்கு கலெக்டர் அவர்களே தலைவராக இருப்பது என்று முடிவு செய்திருக்கிறது. அதுதான் காரணம்.

State Transport Systems (fares)

* 137 *Q.*—SRI A. K. SUBBIAH (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the proposals under consideration of the Government for revising the fare structure of the State Transport System;

(*b*) when the revised structure of fare would be brought into force; and

(*c*) the amount of additional revenue anticipated for the year 1963-64 as a result of the proposed revision?

THE HON. SRI R. VENKATARAMAN : As the proposal for the revision of fare structure of the Madras State Transport Department is still under consideration, Government are not in a position to disclose details regarding (*a*) and (*b*) and (*c*) as yet.

திரு. கே. ஏ. மதியழகன் : கேரள மாநிலத்தில் பஸ் கட்டணங்களை உயர்த்தியதன் விளைவாக ஏற்பட்ட கிளர்ச்சிகளை மனத்தில் கொண்டு, இந்த பஸ் கட்டணங்களை உயர்த்துகிற முயற்சியைத் தவிர்க்க அரசாங்கம் முயலுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பட்ஜெட் விவாதத்தின் போது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் நஷ்டத்திலே ஓடுகிறது என்று எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுச் சொல்லாமல், பொது மக்களுடைய வரிப்பணத்திலிருந்து ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டை ஸப்ஸிடைஸ் பண்ணி நடத்தலாம் என்று சொல்லி ஆதரித்தால், எதையும் யோசனை செய்யலாம்.

புலவர் கா. கோவிந்தன் : பஸ்களுக்கான லைசென்சு கட்டணங்களை உயர்த்திய நேரத்தில், தனியார் பஸ் கட்டணங்களை உயர்த்தி விடுவார்கள் என்று சொன்னபோது, கனம் அமைச்சர் அவர்கள்

சர்க்கார் துறையில் நடத்துகிற பஸ்களுக்கு கட்டணம் உயராது என்ற உறுதி மொழியைக் கொடுத்தார்கள். அந்த உறுதி மொழியைக் காப்பாற்றுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த உறுதிமொழி காப்பாற்றப்பட்டுவிட்டது என்பதை கனம் அங்கத்தினர் தெரிந்து கொள்ளவில்லை என்பதுதான் ஆச்சரியம். கடந்த ஆண்டு பஸ் கட்டணம் சம்பந்தமாக, ராஜ்ய சர்க்கார் எந்தவிதமான உயர்வும் செய்யவில்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னை நகரிலுள்ள பஸ் கட்டணத்தை ஒரே மாதிரியாக, அதாவது ஃபிளாட் ரேட்டாக ஆக்குகின்ற யோசனை அரசாங்கத்துக்கு உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சொந்த முறையிலே எனக்கு அது ரொம்பவும் பிடித்தமான யோசனை. ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் அமல் நடத்துவது அவ்வளவு சுலபம் அல்ல என்ற எண்ணம் இருக்கிறது. ஏனென்றால் குறைந்த தூரப் பிரயாணிகள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால், அவர்கள் கஷ்டப்படுவார்கள். அதனால்தான் இந்த யோசனையை ஏற்க இயலாத நிலைமை இருக்கிறது.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு டிராக்டர்கள்

*138 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து யூனியன்களுக்கு கிராம அபிவிருத்தி ஸ்தல நிர்வாக இலாகாமூலம் டிராக்டர் வாங்கி வாடகைக்கு விடும் உத்தேசம் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) அதுபற்றிய முடிவு எப்போது எடுக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The question of supplying tractors to the Panchayat Unions under the Hire Purchase Scheme is under consideration of the Government.

(b) It has been decided that tractors may be supplied initially to two or three Panchayat Unions as an experimental measure and that the position should be reviewed before the scheme is extended to other Panchayat Unions. The Director of Agriculture has accordingly been asked to select two or three Panchayat Unions and supply tractors to them under the Hire Purchase Scheme. The question of supplying tractors to other Panchayat Unions will be considered after reviewing the results in those Panchaayt Unions.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலில் இருக்கும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்குமா ? ஏனென்றால், இரண்டு மூன்று பஞ்சாயத்துக்கு மட்டும் கொடுத்து விட்டால் மற்ற மாவட்டங்களில் அதன் பலனை அடைய முடியாத நிலைமை ஏற்படும். ஆகவே,